*செய்தி வெளியீடு எண் : 02* *நாள் : 02.09.2019*

**தேனி மாவட்டம்,**
**குடிமராமத்து திட்டத்தின் கீழ்**
**கண்மாய்களை சீரமைக்கும் பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

*தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தே.மீனாட்சிபுரம் கிராமத்திற்குட்பட்ட அழகர் நாயக்கன்குளம் கண்மாய், அழகர் செட்டிக்குளம், கோம்பை கிராமத்திற்குட்பட்ட கோம்பை புதுக்குளம் கண்மாய் ஆகிய கண்மாய்கள் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.84.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் (01.09.2019) நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

**ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

*தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*குடிமராமத்து திட்டத்தின் கீழ் உத்தமபாளையம் வட்டம், தே.மீனாட்சிபுரம் கிராமத்திற்குட்பட்ட அழகர்நாயக்கன்குளம் கண்மாய் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணி, வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி, மடை 1-ல் தடுப்பு சுவர் அமைக்கும் பணி ஆகிய பணிகள் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இக்கண்மாய் மூலம் பாசனவசதி பெறும் 4.50 ஹெக்டர் (11.11 ஏக்கர்) நிலங்களுக்கான பாசனவசதி உறுதிபடுத்தப்படும். நீர் பிடிப்பு பரப்பளவு 8 ஹெக்டர் ஆகும்.*

*உத்தமபாளையம் வட்டம், தே.மீனாட்சிபுரம் கிராமத்திற்குட்பட்ட அழகர்செட்டிகுளம் கண்மாய் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணி, வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி, கலிங்கு மராமத்து பணி, சைபன் மராமத்துப்பணி ஆகிய பணிகள் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இக்கண்மாய் மூலம் பாசனவசதி பெறும் 4.38 ஹெக்டர் (10.82 ஏக்கர்) நிலங்களுக்கான பாசனவசதி உறுதிபடுத்தப்படும். நீர் பிடிப்பு பரப்பளவு 8 ஹெக்டர் ஆகும்.*

*உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமத்திற்குட்பட்ட கோம்பை புதுக்குளம் கண்மாய் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி, வரத்து வாய்க்கால் மற்றும் வழங்கு வாய்க்கால் தூர் வாரும் பணி ஆகிய பணிகள் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இக்கண்மாய் மூலம் பாசனவசதி பெறும் 72.21 ஹெக்டர் (178.35 ஏக்கர்) நிலங்களுக்கான பாசனவசதி உறுதிபடுத்தப்படும். நீர் பிடிப்பு பரப்பளவு 32.20 ஹெக்டர் ஆகும்.*

*இப்பணிகள் மேற்கொள்வதன் மூலம் கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றி சென்று கண்மாயை விரைந்து அடையும். வெள்ளக்காலங்களில் வாய்க்கால் மற்றும் கண்மாயில் உடைப்பு ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து குடிநீர் தேவை மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தண்ணீர் தங்குதடையின்றி கிடைத்திட வழிவகை செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.*

*ஆய்வின்போது நீரினைப்பயன்படுத்துவோர் சங்கங்களின் உறுப்பினர்களிடம் இப்பணி தன்மை குறித்தும், குடிமராமத்து திட்டப்பணிகளை சிறப்பான முறையில் பணிகள் மேற்கொள்ளுவது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.*

*ஆய்வின்போது, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரஅமைப்பு) செயற்பொறியாளர் சுந்தரப்பன், உதவி செயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவிப்பொறியாளர் ராமேஸ்வரன் மற்றும் விவசாயிகள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***